**செய்தி வெளியீடு எண்:728** **நாள்: 05.12.2012**

<u>செய்தி வெளியீடு</u>

தமிழகம் 1076 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரையினைக் கொண்டுள்ளது. இங்குள்ள 591 கடல் மீனவ கிராமங்களில் சுமார் 9 லட்சம் மீனவ மக்கள் உள்ளனர். 6,200 மீன்பிடி விசைப் படகுகளும், 50,000 பாரம்பரிய கலன்களும் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ளன. தமிழகத்தில் கடல் மீன் உற்பத்தி 4.25 லட்சம் டன் ஆகும். தமிழ்நாட்டிலிருந்து 2,000 கோடி ரூபாய் மதிப்புள்ள கடல் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

மீன்வளத்தை மேம்படுத்தவும், மீன்வளத்தைப் பெருக்குவதில் நவீன தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தி அதன் மூலம் மீனவர்களின் வருவாய் மேம்பாடு அடையச் செய்வதற்கும், மீனவளக் கல்வியை ஊக்குவிப்பது அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு நாகப்பட்டினம் தாலுக்காவில் பனங்குடி மற்றும் நாகூர் முட்டம் கிராமங்களில் 85 ஏக்கர் நிலப்பரப்பில் மீனவளப் பல்கலைக் கழகம் அமைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஏற்கெனவே உத்தரவிட்டுள்ளார்கள்.

மேலும், உள்நாட்டு மீன் உற்பத்தியை மேலும் அதிகரிப்பதற்கும், தற்போதுள்ள உள்நாட்டு நீர்வளங்களை முழுமையாக பயன்படுத்தி மீன்பிடிப்பை அதிகப்படுத்துவதற்கும், நவீன வசதிகளுடன் கூடிய மீன் விதைப் பண்ணைகளை ஈரோடு மாவட்டத்தில் பவானிசாகர், கரூர் மாவட்டத்தில் திருக்கம்புலியூர், திருச்சி மாவட்டத்தில் அசூர், புதுக்கோட்டை மாவட்டத்தில் தட்டமனைப்பட்டி, தஞ்சாவூர் மாவட்டத்தில் அகரப்பேட்டை, நெய்தலூர், தட்டான்குளம், விழுப்புரம் மாவட்டத்தில் வீடூர் அணை, காஞ்சிபுரம் மாவட்டத்தில் வாணியஞ்சாவடி, திருநெல்வேலி மாவட்டத்தில் மணிமுத்தாறு, கடலூர் மாவட்டத்தில் லால்பேட்டை ஆகிய 11 இடங்களில் 37 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் கடப்பாக்கம், கடலூர் மாவட்டத்தில் சாமியார்பேட்டை, நாகப்பட்டினம் மாவட்டத்தில் செருதூர், புதுக்கோட்டை மாவட்டத்தில் முத்துக்கூடா, ராமநாதபுரம் மாவட்டத்தில் தேவிபட்டினம், ரோச்மாநகர், தூத்துக்குடி மாவட்டத்தில் தருவைக்குளம், திரேஸ்புரம் (விவேகானந்தர் காலனி), கன்னியாகுமரி மாவட்டத்தில் இனயம்புத்தன்துறை, சைமன் காலனி, குரும்பனை ஆகிய 11 இடங்களில் சுகாதாரமான முறையில் மீன்களை கையாளுவதற்கு ஏற்றவாறு ஏலக்கூடம், வலை பின்னும் கூடம், மீன் உலர்தளம், உட்புற சாலை வசதி, தெரு விளக்கு வசதி, தண்ணீர் வசதி, கழிவு நீர் வடிகால் வசதி மற்றும் அலுவலகக் கட்டடம் ஆகிய வசதிகளுடன் கூடிய மீன் இறங்கு தளங்களை 63 கோடி ரூபாய் செலவில் அமைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

மீன் வளர்ப்பு, மீன் உற்பத்தி, மீன் உணவின் முக்கியத்துவம், மீனிலிருந்து தயாரிக்கப்படும் உணவு வகைகள் ஆகியவைகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் மீன் உணவுத் திருவிழா ஒன்றினை இந்த

ஆண்டு சென்னை தீவுத் திடலில் மூன்று முதல் நான்கு நாட்கள் நடத்துவதற்கும், இந்த விழாவினை நடத்துவதற்கு 1 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இந்தத் திருவிழாவில் தேசிய அளவிலான மீன் வளர்ப்பு சார்ந்த நிறுவனங்கள், மீன் உணவு தயாரிப்பில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள், மீன் தீவனம் தயாரித்து விற்பனை செய்து வரும் நிறுவனங்கள், வண்ண மீன் உற்பத்தி நிறுவனங்கள் ஆகிய அனைத்து நிறுவனங்களும் கலந்து கொள்ளும்.

அரசின் இந்த நடவடிக்கைகளால் அதிக அளவு மீன் உற்பத்தி ஏற்படுவதுடன், மீனவர்களின் வாழ்வாதார நிலை உயர வழிவகை ஏற்படும்.

*******

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9.

நாள் :- 5.12.2012.